# நீதி

மக்காஹ் மாநகர வெற்றிக்குப் பிந்திய காலக்கட்டமாக இருந்தது, ஒரு ஃகுரைஷியப் பெண் திருட்டின் காரணமாகப் பிடிபட்டாள், இறைத்தூத ரிடம் ﷺ இந்த செய்தி வந்தது, அவர்களும் ﷺ அதற்கான தண்டனை நிறை வேற்றவேண்டும் என்று கருதினார்கள், இறுதியில் அவளுடைய கை துண்டிக்கப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அந்தப் பெண்ணின் வீட்டார்களுக்கு தகவல் கிடைத்தபோது ஒரு கண்ணியமான குடும்பத்துப் பெண்ணின் கை வெட்டப்படுகின்றதே என்று வேதனைப்பட்டார்கள். ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களை இறைத்தூதர் ﷺ அவர்கள் அதிகமாக நேசிக்கிறார்கள் என்று அனைத்து மக்களுக்கும் தெரிந்திருந்தது. அந்த மக்கள் ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களை இறைத்தூதர் ﷺ அவர்களிடம் சிபாரிசு செய்யுமாறு வேண்டிக்கொண்டு, அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். ஆகவே, அவர்கள் இறைத்தூதரிடம் ﷺ வந்தார்கள் மற்றும் அவளுடைய கைகளை வெட்டவேண்டாம் என்று சிபாரிசும் செய்தார்கள். இதனைக்கேட்டு இறைத்தூதர் ﷺ அவர்களுடைய முகத்தின் நிறம் மாறிவிட்டது, அவர்கள் ﷺ ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களைப்பார்த்துக் கூறினார்கள்: உங்கள் முன்னோர்கள் இதன் காரணமாகத்தான் அழிந்துபோனார்கள், அவர்களில் கண்ணியமானவர்கள் திருட்டின் காரணமாகப் பிடிப்பட்டார்கள் என்றால் அதனைக்கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவார்கள் ஆனால், பலவீனமானவர்கள் திருடி னால் அதற்கான தண்டனை நிறைவேற்றப்படும். அல்லாஹ்வின்மீது சத்தியம், முஹம்மதின் ﷺ மகள் ஃபாதிமா (ர) திருடியிருந்தாலும்கூட நான் அவருடைய கையை வெட்டியிருப்பேன்.(புக்ஹாரி). மற்றொரு சம்பவம் ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய ஃகிலாஃபத் காலத்தில் நடந்தது. ஒருவர் எகிப்து நாட்டிலிருந்து வந்தார், அவர் ஹஜ்ரத் உமர் ஃபாரூஃக் (ர) அவர்களிடம் எகிப்தின் ஆளுனரைப் பற்றிப் புகார் செய்தார். எகிப்தின் ஆளுனரான ஹஜ்ரத் அம்ர் பின் ஆஸ் (ர) அவர்க ளுடைய மகனுடன் நான் போட்டிபோட்டு விளையாடிக் கொண்டிருந் தேன், போட்டியில் நான் வெற்றியடைந்துவிட்டேன், அதற்காக அவர் என்னை சாட்டையால் அடித்தார், அத்துடன் கூறினார் நான் மரியாதையும் கண்ணியமும் உடையவரின் மகனாவேன். ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் இதனைக்கேட்டு எகிப்திற்கான ஆளுநருக்கு உடனே தன்னு டைய மகனை அழைத்துக்கொண்டு வருமாறு ஆணையை அனுப்பினார். அவர் தன்னுடைய மகனுடன் வந்து ஃகலீஃபாவைச் சந்தித்தார், அப்போது பாதிக்கப்பட்ட அந்த எகிப்தியரை அழைத்து அவருடைய கையில் ஒரு சாட்டையைக்கொடுத்து அந்த கண்ணியமிக்கவருடைய மகனை நீயும் அவன் உன்னை அடித்த வகையிலேயே அடி என்று கூறினார். ஹஜ்ரத் உமர்

www.uzaifalah.com

பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய ஆட்சிக்காலத்தின் ஒரு நிகழ்வில் ஒரு கண்ணியமிக்க அரேபிய மன்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் பின்பு அவர் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காஹ்விற்குச் சென்றார். அங்கு தவாஃப் செய்யும்போது அவருடை மேலாடை மற்ற ஒருவருடைய காலில் சிக்கியது, அந்த அரேபிய மன்னருக்குக் கோபம் வந்தது, அவர் அந்த மனிதரை முகத்தில் அறைந்துவிட்டார். அந்த மனிதர் ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களிடம் சென்று புகார் செய்தார். அந்த மன்னர் அழைக்கப்பட்டார், அவர் ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களிடம் வந்தபோது பாதிக்கப்பட்ட அந்த மனிதரை அழைத்து கூறினார்கள், நீயும் அவருடைய முகத்தில் அவர் அறைந்தது போன்றே அறைந்துவிடு. அந்த அரேபிய மன்னர் நீதி நிலைநாட்டப்படும் இந்த நிலையைக்கண்டு திகைத் துப்போனவராகக் கூறலானார், நானும் இந்த சாதாரண மனிதரும் சம மானவர்களா? ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் கூறினார்கள், ஆம், இஸ்லாம் உங்கள் இருவருக்கும் சம அந்தஸ்தை அளித்துள்ளது.

ஒரு சம்பவத்தைப்பற்றிக் கூறப்படுகிறது, ஒரு மீனவர் ஒரு பெரிய மீன் பிடித்துக்கொண்டு வீட்டிற்குச் சந்தோஷமாகச் சென்றுகொண்டிருந்தார். வழியில் அந்த நாட்டு அரசரும் சென்றுகொண்டிருந்தார், அவர் மீனவரிட மிருந்து அந்த மீனை வலுக்கட்டாயமாக பறித்துக்கொண்டார். அந்த மீன வர் மீனைப்பறிகொடுத்ததால் மிகவும் வேதனைப்பட்டு அந்தக் கொடுமை யாளனை சாபமிட்டார், அல்லாஹ்வே இந்த கொடுமையாளனான அரச னுக்கு இதற்கான தண்டனையை அளிப்பாயாக. அரசர் அந்த மீனை எடுத் துக்கொண்டு அரண்மனைக்கு வந்து அதனைப் பணியாளனிடம் ஒப்படைத் தார். அந்தப்ணியாளனின் விரல் மீனின் வாயில் பட்டது, அதனை அந்த மீன் கடித்துவிட்டது, அவன் வலியால் கதறினான், மருத்துவர் அழைக்கப் பட்டார், அப்போது அந்த மீனுடைய பற்கள் விஷமானவை எனத்தெரிந் தது. அதன் விஷம் உடலில் பரவாமலிருக்க அவனுடைய விரல் வெட்டப் படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது, அவ்வாறே வெட்டப்பட்டும் விட்டது, ஆனால், விஷம் உடலில் பரவி உயிருக்கே ஆபத்தாக ஆகிவிட் டது. இதனைக்கண்ட அந்த அரசன் தன்னுடைய அத்துமீறலான செயலை நினைத்துப்பார்த்தவனாக அந்த மீனவரைத் தேடி வரவழைத்தான் மற்றும் அவனிடம் மன்னிப்புக்கேட்டான். இதுபோன்ற மற்றொரு சம்பவம் ஹஜ்ரத் அலி (ர) அவர்களுடைய காலத்தில் நடந்தது. அவர்களுடைய ஒரு கவசம் ஒரு யூதனிடம் காணப்பட்டது. ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் அந்த யூதனுக்கு எதிராக ஃகாஜி நீதிமன்றத்தில் ஒரு வழக்கு பதிவு செய்தார்கள். இருவரும் ஃகாஜி நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். ஃகாஜி அவர்கள் ஹஜ்ரத் அலி (ர) அவர்களிடம் சாட்சிகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள், ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் தன்னுடைய மகனான ஹஜ்ரத் ஹுஸைன் (ர) அவர்களை சாட்சியாக சமர்ப்பித்தார்கள். ஃகாஜி அவர்கள்

www.uzairtalahi.com

தந்தைக்காக மகன் சாட்சி கூறுவதை ஏற்க மறுத்துவிட்டார்கள் மற்றும் அந்த யூதனுக்கு ஆதரவாக தீர்ப்பு கூறினார்கள். இந்த சம்பவம் அந்த யூதன் மனதில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியது. ஆட்சியாளர் ஒரு நீதிபதி யின் மன்றத்தில் ஆஜராகுதல், நீதிபதி சாட்சிகளைச் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுதல், தந்தைக்கு ஆதரவாக ஒரு மகனின் சாட்சியை ஏற்க மறுத்து அதனை நிராகரித்தல், நிதிபதியின் தீர்ப்பை ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் அமைதியுடன் ஏற்றுக்கொண்டு அதற்குப் பணிதல் ஆகியவற்றைக் கண்டு அந்த யூதன் பெரிதும் ஈர்க்கப்பட்டு மனமாற்றத்தின் காரணமாக ஹஜ்ரத் அலி (ர) அவர்களிடம் வந்து கூறினான், இந்தக் கவசம் உங்களுடையது தான், நீங்கள் ஒட்டகத்தினன்மீது சென்றுகொண்டிருந்தபோது இது கீழே விழுந்துவிட்டது, அதனை நான் எடுத்துக்கொண்டேன். இஸ்லாத்தின் இந்த நீதி மற்றும் நியாயம் வழங்கும் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட் டுள்ளேன், நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறினான். ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் அவன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதைக்கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள் மற்றும் அந்தக் கவசத்தை அவனுக்கு அன் பளிப்பாக வழங்கினார்கள். நீதி மற்றும் நியாயம் சார்ந்த பல அறிவுரைகள் திருக்ஃகுர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அல்லாஹ் தஆலா மனிதர்கள் நீதி மற்றும் நியாயத்தைப் பேணுமாறு ஊக்குவிப்பதோடு அதனை உறுதியுடன் நிலைநாட்டுமாறும் அறிவுறுத்துகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ يَأۡمُرُ بِٱلۡعَدۡلِ وَٱلۡإِحۡسَٰنِ وَإِيتَآيِٕ ذِي ٱلۡقُرۡبَىٰ ﴿٩٠﴾ (النحل :90)

பொருள்: *திண்ணமாக, அல்லாஹ் நீதி செலுத்தும்படியும் நன்மை செய்யும்படியும் உறவினர்களுக்கு ஈந்துதவும்படியும் கட்டளையிடுகிறான். (அந் நஹல் 90)*

மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

وَإِذَا حَكَمۡتُم بَيۡنَ ٱلنَّاسِ أَن تَحۡكُمُواْ بِٱلۡعَدۡلِۚ ﴿٥٨﴾ (النساء :58)

பொருள்: *அல்லாஹ் உங்களை நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கி னால் நீதியாகத் தீர்ப்பு வழங்குங்கள் என்று கட்டளையிடுகிறான். (அந் நிசா 58)*

அத்லுன் எனும் சொல் அல்லாஹ்வின் திருநாமங்களான பண்புகளில் ஒரு மகத்தான பண்பாக (நீதியாளன்) உள்ளது. மனிதர்களுடைய வாழ்க்கை யில் நீதி மற்றும் நியாயத்தைப் பேணும் சம்பவங்கள் ஏராளம்!

## நீதியின் விதங்கள்

### 1. இரண்டு சண்டை சச்சரவு செய்வோருக்கிடையே நீதியை நிலைநாட்டுவது:

இவ்விஷயத்தில் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய ஒரு முன்மாதிரி சம்பவம் உள்ளது. ஒரு முறை இரண்டு அன்சாரிகளான நபித்தோழர்கள்

www.uzairfalahi.com

அவர்களுக்கிடையிலான சச்சரவின் பொருட்டு இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து எங்களுக்கிடையே உள்ள சச்சரவில் தீர்ப்பினை வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், எவர் தன்னுடைய சகோதரனுடைய உரிமையைப் பறித்து துரோகம் செய்வாரோ அவர் தனக்காக ஒரு நெருப்பின் கொள்ளியை எடுத்துக் கொண்டார் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட அவ்விருவரும் அழத் தொடங்கினார்கள் மற்றும் ஒருவரை மற்றவர் விட்டுக்கொடுத்து சச்சரவைத்தீர்த்துக்கொண்டனர்.

### 2. எடை மற்றும் அளவையில் நீதியைக் கடைப்பிடித்தல்:

அதாவது சரியாக எடை போடுவது மற்றும் அளந்து கொடுப்பது,இதில் தில்லுமுல்லு ஏதும் செய்யாதிருப்பது. பெரும்பாலும் மக்கள் ஒன்றை அளந்து அல்லது நிறுத்து வாங்கும்போது அதிகமாக வாங்குகின்றனர், ஆனால், நிறுத்துக் கொடுக்கும்போது தில்லுமுல்லு செய்கின்றனர். இவ்வாறு செய்வதை திருக்ஃகுர்ஆனில் கடுமையாகக்கண்டிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

وَيْلٌ لِّلْمُطَفِّفِينَ ﴿١﴾ ٱلَّذِينَ إِذَا ٱكْتَالُوا۟ عَلَى ٱلنَّاسِ يَسْتَوْفُونَ ﴿٢﴾ وَإِذَا كَالُوهُمْ أَو وَّزَنُوهُمْ يُخْسِرُونَ ﴿٣﴾ أَلَا يَظُنُّ أُو۟لَٰٓئِكَ أَنَّهُم مَّبْعُوثُونَ ﴿٤﴾ لِيَوْمٍ عَظِيمٍ ﴿٥﴾ (المطففين :1 – 5)

*பொருள்: அளவையில் மோசடி செய்பவர்களுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால், மக்களிடமிருந்து அளந்து வாங்கும்போது நிறைவாக வாங்குகிறார்கள், அவர்களுக்கு அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும் போது குறைத்துக்கொடுக்கின்றார்கள். நிச்சயம் அவர்கள் ஒரு மாபெரும் நாளில் எழுப்பிக்கொண்டுவரப்படவிருக்கிறார்கள் என்பதை அவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லையா (அல்முதஃப்பிஃபீன் 1-5).* மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَأَقِيمُوا۟ ٱلْوَزْنَ بِٱلْقِسْطِ وَلَا تُخْسِرُوا۟ ٱلْمِيزَانَ ﴿٩﴾ (الرحمن :9)

*பொருள்: மேலும், நீதியுடன் மிகச் சரியாக நிறுங்கள், தராசில் எடையைக் குறைத்துவிடாதீர்கள். (ரஹ்மான் 9)*

### 3. மனைவிகளுக்கிடையில் நீதியைக் கடைப்பிடித்தல்:

ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால் அவர்களுக்கிடையே நீதியுடன் நடந்துகொள்ளவேண்டும். உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அனைத்திலும் அவர்களுக்கு சமமாக அளிக்கவேண்டும், அவர்களுடன் சம அளவில் நேரத்தையும் பகிர்ந்துகொள்ளவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

www.tizaifalahi.com

مَنْ كَانَتْ لَهُ امْرَأَتَانِ فَمَالَ إِلَى إِحْدَاهُمَا، جَاءَ يَوْمَ الْقِيَامَةِ وَشِقُّهُ مَائِلٌ

*பொருள்: எவருக்கு இரண்டு மனைவிகள் இருந்து, அவர் ஒரு மனைவியின் பால் அதிகம் ஈர்க்கப்பட்டு இருந்திருப்பாரேயானால் மறுமை நாளில் அவர் ஒருபுறம் நொடிந்து சாய்ந்தவராக எழுப்பப்படுவார்* (அபூ தாவூத், நிசாஇ, திர்மிதி, இப்னு மாஜா).

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய வாழ்க்கைமுறை இதற்கான பிரகாசமான ஒரு முன்மாதிரியாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய மனைவி மார்களுக்கிடையே நியாயமாக நடந்துகொள்வார்கள் என்றும் அவர்கள் அல்லாஹ்விடம், என் இறைவனே, என்னுடைய உரிமைக்குட்பட்டவற்றில் இது என்னுடைய பங்கீடாக உள்ளது, நாளை மறுமை நாளில் என்னிடம் உன்னுடைய அதிகாரத்திலுள்ள விஷயங்களில் என்னிடம் கணக்கு கேட்டுவிடாதே, அவை என் அதிகாரத்தில் இல்லை (அபூ தாவூத், திர்மிதி, நிசாஇ, இப்னு மாஜா).

### 4. குழந்தைகளுக்கிடையில் நீதியைக் கடைப்பிடித்தல்:

குழந்தைகளுக்கிடையில் நீதியுடன் நடந்துகொள்வது அவர்களைச் சீரான முறையில் வளர்ப்பதில் மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறு இல்லாத நிலையில் அவர்களுக்கிடையே வெறுப்புணர்ச்சி தலைதூக்குவதோடு அவர்களிடையே பொறாமையும் பகைமையும் ஏற்பட்டுவிடும், இதனால், குடும்பத்தில் அமைதி குலைந்துவிடுவதோடு அக்குழந்தைகளின் எதிர்காலமும் பாழாகிவிடும் மற்றும் அவர்கள் அல்லாஹ்வை மறந்தவர்களாக விலகிச் சென்றுவிடுவார்கள். ஹஜ்ரத் நுஃமான் பின் பஷீர் (ர) அவர்கள் கூறுகிறார்கள், என்னடைய தந்தை எனக்கு ஒரு பொருளை அன்பளிப்பாக அளித்தார்கள், ஆனால், அவருடைய தாய் அதனைப் பெற்றுக்கொள்வதை ஏற்கவில்லை, கூறினார்கள் எதுவரை இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறவில்லையோ அதுவரை நாங்கள் அதனை வாங்கிக்கொள்ளமாட்டோம். இவ்விஷயம் இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு முன் கொண்டுவரப்பட்டது. என்னுடைய தந்தை இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கூறினார்கள், உம்ரஹ் பின் ரவாஹாவின் வழியாக இவர் என்னுடைய மகன் நுஃமான், நான் இவருக்கு ஒரு அன்பளிப்பு கொடுக்க விரும்புகிறேன், ஆனால், இவருடைய தாய் கூறுகின்றார்கள் இதற்கு தாங்கள் சாட்சியாக இருக்க வேண்டும் என்று. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்: நீர் அனைத்து மகன்களுக்கும் இவ்விதமான அன்பளிப்பைக் கொடுத்தீர்களா? அவர்கள் கூறினார்கள், இல்லை. அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: فاتَّقُوا اللهَ واعْدِلُوا بينَ أَولَادِكُم பொருள்: *அல்லாஹ்வைக்கொண்டு*

www.uzairfalahi.com

*அஞ்சுங்கள், உங்கள் மக்களுக்கிடையில் நியாயமாக நடந்துகொள்ளுங்கள் (புக்ஹாரி).*

### 5. அனைவருக்கிடையிலும் நீதியைக் கடைப்பிடித்தல்:

அனைத்து மனிதர்களுக்கிடையிலும் நியாயமாக நடந்துகொள்வது ஒரு முஸ்லிமுடைய கடமையாகும், அவர்கள் தம்மைச்சார்ந்தவர்களாக இருந்தாலும் அன்னியர்களாக இருந்தாலும், முஸ்லிமாகவோ முஸ்லி மல்லாதவராக இருந்தாலும் சரியே! ஏனெனில் அல்லாஹ் தஆலா அனை வருடனும் நியாயமாக நடந்துகொள்ளும்படி கட்டளையிட்டுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

وَلَا تَبۡخَسُواْ ٱلنَّاسَ أَشۡيَآءَهُمۡ ﴿١٨٣﴾ (الشعراء :183)

*பொருள்: மக்களுக்கு அவர்களுடைய பொருளைக் குறைத்துக்கொடுக்கா தீர்கள். (அஷ்ஷுஅரா 183)*

மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَلَا يَجۡرِمَنَّكُمۡ شَنَـَٔانُ قَوۡمٍ عَلَىٰٓ أَلَّا تَعۡدِلُواْۚ ٱعۡدِلُواْ هُوَ أَقۡرَبُ لِلتَّقۡوَىٰۖ ﴿٨﴾ (المائدة :8)

*பொருள்: எந்த ஒரு கூட்டத்தார்மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச்செய்துவிடக்கூடாது, நீங்கள் நீதி செலுத் துங்கள், இதுவே இறையச்சத்திற்கு மிகப்பொருத்தமானது.(அல்மாயிதா8)*

நீதி, நியாயம் என்ற விஷயத்தில் எவரும் நண்பரோ விரோதியோ என்றில்லை, நெருங்கியவரோ தூரமானவரோ என்றுமில்லை, நீதியின் பார்வையில் அனைவரும் சமமானவர்களே.

### நீதியை நிலைநாட்டுவதன் சிறப்பு:

அல்லாஹ்விடத்தில் நீதி மற்றும் நியாயம் வழங்குவது மிகவும் மதிப்பு வாய்ந்த விஷயமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَأَقۡسِطُوٓاْۖ إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلۡمُقۡسِطِينَ ﴿٩﴾ (الحجرات :9)

*பொருள்: இன்னும், நீதி செலுத்துங்கள், நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கிறான். (ஹுஜ்ராத் 9).* பிரபலமான நபித் தோழர் ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் கூறுகிறார்கள், தன்னுடைய பிரஜைகளுக்கிடையே நீதியை நிலைநாட்டும் ஒரு அரசனுடைய ஒரு நாள் பணியானது இறைவணக்கத்திலேயே ஈடுபாடு கொண்டிருக்கும் இபாதத் தான ஒருவருடைய நூறு ஆண்டு இறைவணக்கத்தைவிடச் சிறந்தது.

**நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டுவது என்பது அமைதி மற்றும் பாதுகாப்புக் கான அடிப்படையாகும்.** *ஒரு அரசருடைய தூதர் ஹஜ்ரத் உமர் (ர) அவர்க ளிடம் வந்தார், அப்போது முஸ்லிம்களின் ஆட்சியாளர், ஃகலீஃபாவான*

www.uzairfalahi.com

அவரை எவ்வித அச்சமுமின்றி ஒரு மரத்தினடியில் தூங்கிக்கொண்டிருப் பதைக் கண்டார். அவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது, அங்கே பாதுகாவலர் கள் யாருமில்லை? இராணுவமோ கோட்டையோ ஒன்றுமே இல்லை, எவ்வளவு சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்கிறார். இந்தக் காட்சியைக்கண்ட அவர் தன்னை அறியாமலேயே கூறலானார்: حَكَمْتَ فَعَدَلْتَ فَأَمِنْتَ فَنِمْتَ உமர் அவர்களே, நீங்கள் உங்கள் ஆட்சியை நீதி மற்றும் நியாயத்தின் அடிப் படையில் நிலைநாட்டியுள்ளீர்கள், ஆகவே, உங்களுக்கு எவ்வித அச்சமு மில்லை, பாதுகாப்பு தேவையுமில்லை அதனால்தான் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

**நீதி ஒரு அரசின் அடிப்படையாகும்:**

ஃகலீஃபா உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்களிடம் ஒரு ஆளுநர் பாதுகாப்பிற்காக ஒரு கோட்டையைக் கட்டவேண்டும், அதற்காக ஒரு பெரிய தொகையினை ஒதுக்கித்தருமாறு கேட்டுக்கொண்டார். ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்கள் அளுநருடைய கடிதத்திற்கு பதிலளித்தார்கள், அரண் சுவர்கள் உங்களைக்காப்பாற்றாது, நீதியை நிலை நாட்டி பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை ஆக்கிக்கொள்ளுங்கள் மற்றும் சாலைகள் தெருக்களை அநியான செயல்களிலிருந்து பாதுகாப்பாக வைத் துக்கொள்ளுங்கள்.

www.uzairfalahi.com

**நீதி நியாயம் வலிமையற்றவர்களுக்கும் அமைதியும் பாதுகாப்பும் அளிக்கும்** மற்றும் அவர்களுடைய தன்மானத்தைப் பாதுகாக்கும். இதன் காரணமாக, அவர்களுடைய மரியாதை மற்றும் பெருந்தன்மை உயர்வினை எட்டிவிடு கின்றது.

**நீதி நியாயம் நிலைநாட்டப்படுவதால் பரஸ்பர அன்பு வளர்கின்றது** மேலும், ஆட்சியதிகாரத்திலுள்ளவர்களுக்கும் குடிமக்களுக்குமிடையே நெருங்கிய உறவுகள் ஏற்படும்.

**நீதி நியாயம் அத்துமீறல்களிலிருந்து தடுக்கின்றது** பேராசையின் வேர்கள் அறுக்கப்படுகின்றன மற்றும் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின் றன.

**அநீதி**

அல்லாஹ் தஆலா அநீதி மற்றும் கொடுமையிழைப்பதிலிருந்து விலகி இருக்குமாறு கட்டளையிடுகின்றான். அல்லாஹ் கூறுகிறான்:

وَلَا تَحْسَبَنَّ ٱللَّهَ غَـٰفِلًا عَمَّا يَعْمَلُ ٱلظَّـٰلِمُونَ ۚ إِنَّمَا يُؤَخِّرُهُمْ لِيَوْمٍ تَشْخَصُ فِيهِ ٱلْأَبْصَـٰرُ (ابراهيم:42)

பொருள்: *இந்த அக்கிரமக்காரர்களின் செயல்களை அல்லாஹ் கவனிக்கா மல் இருக்கிறான் என்று (நபியே) நீர் கருதவேண்டாம். அவர்களை அவன்*

*விட்டுவைத்திருப்பது அவர்களுடைய விழிகள் மருளும் ஒரு குறிப்பிட்ட அந்நாள் வரைக்கும்தான். (இப்ராஹீம் 42)*

*மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:*

فَوَيْلٌ لِّلَّذِينَ ظَلَمُوا۟ مِنْ عَذَابِ يَوْمٍ أَلِيمٍ ﴿٦٥﴾ (الزخرف :65)

*பொருள்: எனவே, கொடுமை புரிந்தவர்களுக்கு துன்புறுத்தக்கூடிய அந் நாளின் தண்டனையின் வாயிலாக அழிவுதான். (அஸ்ஜுக்ஹருஃப் 65)*

*அல்லாஹ் அநீதியிழைப்போர்களை சபித்துக் கூறுகிறான்:*

أَلَا لَعْنَةُ ٱللَّهِ عَلَى ٱلظَّٰلِمِينَ ﴿١٨﴾ (هود :18)

*பொருள்: இத்தகைய அக்கிரமக்காரர்கள்மீது அல்லாஹ்வின் சாபம் உண் டாகும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். (ஹூத் 18)*

*இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:*

**اتَّقُوا الظُّلْمَ، فَإِنَّ الظُّلْمَ ظُلُمَاتٌ يَوْمَ الْقِيَامَةِ**

*பொருள்: அநீதியிழைப்பதிலிருந்து விலகியிருங்கள், ஏனெனில், அநீதிகள் மறுமைநாளின் இருள்களாகும் (முஸ்லிம்).* மற்றொரு நபிமொழியில் *கூறுப்பட்டுள்ளது:*

**ثلاث دعوات مستجابات لا شك فيهن، دعوة الصائم، دعوة المسافر، ودعوة المظلوم**

*பொருள்: மூன்று வகையானோரின் துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின் றன, நோன்பு நோற்பவரின் துஆ, பிரயாணத்திலிருப்பவரின் துஆ, அநீதி மற்றும் கொடுமையிழைக்கப்பட்டவருடைய துஆ (பைஹஃகி).*

**கொடுமையிழைக்கப்படும் பல்வேறு நிலைகளும் உள்ளன, உதாரணமாக:**

**1. மனிதன் தன் இறைவன் விஷயத்தில்** அல்லாஹ்வின்மீது விசுவாசம் கொள்ளாமல் அவனை நிராகரிப்பதன் மூலம் அநீதியாக நடந்துகொள்கி றான். இதன் காரணமாகவேதான் அல்லாஹ் இணை வைப்பதைப் பெரும் அநீதியாகக் கருதுகின்றான்.

يَٰبُنَيَّ لَا تُشْرِكْ بِٱللَّهِ ۖ إِنَّ ٱلشِّرْكَ لَظُلْمٌ عَظِيمٌ ﴿١٣﴾ (لقمان :12)

*பொருள்: நீ இறைவனுக்கு எதையும் இணையாக்கிவிடாதே, உண்மை யில், இறைவனுக்கு இணை கற்பிப்பது மாபெரும் அக்கிரமமாகும். (லுஃக்மான் 12)*

**2. மனிதன் மற்றொரு மனிதனனுக்கு அநீதியிழைப்பது** இது எவ்வாறெனில், எக்காரணமுமின்றி ஒருவருடைய உயிரைப் பறிப்பது, அவருடைய சொத் துக்களை வலுக்கட்டாயமாக அபகரிப்பது அல்லது அவரை அவமதித்து



www.uzairfalahi.com

மரியாதை குலைப்பது, ஒருவருடைய உரிமைகளைப் பறிப்பது இவ்வகையில் ஒரு மனிதன் மற்றொரு மனிதன்மீது பல விதங்களில் அநீதியிழைக்கின்றான்.

**3. மனிதன் தமக்குத்தாமே அநீதியிழைத்துக்கொள்வது** இது எவ்வாறெனில், ஒரு மனிதன் பாவச்செயல்களைச் செய்வதில் இறையச்சமின்றி தொடரும் நிலையில் அவன் அதனுடைய விளைவுகளைப்பற்றி கவலையற்றவனாக ஆகிவிடும் நிலை ஏற்படும். மற்றும், அல்லாஹ் காட்டிய வழியைவிட்டு விலகி ஷைத்தான் தூண்டும் வழியில் செயல்படுவது ஆகியவற்றின் மூலம் தமக்குத்தாமே அநீதியிழைப்பவனாக ஆகிவிடுகிறான்.

## அநீதி மற்றும் கொடுமையின் விளைவு

www.uzairfalahi.com

ஒரு நாள் இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களிடம் கேட்டார்கள், நொடிந்து ஏழ்மைக்கு ஆளாகிவிடுபவன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் கூறினார்கள், நாங்கள் யாரிடம் தீனார்களும் திர்ஹம்களும் இல்லையோ மற்றும் யாரிடம் உடைமைகளும் பொருட்களும் இல்லையோ அவரைத்தான் முஃப்லிஸ் என்று கூறுவோம். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நம்முடைய உம்மத்தினர்களின் முஃப்லிஸான நொடிந்தவர்கள் யாரெனில், மறுமைநாளில் ஒருவரிடம் தொழுகை, நோன்பு, ஜ்ஸகாத் ஆகிய நற்காரியங்களின் நன்மை நிறைந்திருக்கும், ஆனால், அவர் ஒருவனை ஏசியும் திட்டியும் இருப்பார், ஒருவர்மீது அவதூறு சுமத்தியிருப்பார், ஒருவருடைய பொருளை அபகரித்து விழுங்கியிருப்பார், ஒருவருடைய இரத்தம் சிந்தியிருப்பார், ஒருவரை அடித்துத் துன்புறுத்தியிருப்பார், ஆகவே அந்த அனைத்துத் தீங்கிழைக்கப்பட்டவர்களுக்கும் அவனுடைய நன்மைகள் பரிகாரமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுவிடும், அவனுடைய நன்மைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டபின்பும் அவனால் தீங்கிழைக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை மீதமிருக்கும் நிலையில், அவர்களுடைய பாவங்கள் இவனுடைய கணக்கில் எழுதப்பட்டு அவன் நரகத்தில் தள்ளப்படுவான் (முஸ்லிம், திர்மிதி). இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்களுடைய உரிமைகளை நிறைவேற்றும்படி அறிவுறுத்தியுள்ளதோடு மறுமை நாளில் இதனைப்பற்றிக் கேள்வி கணக்கு கேட்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்கள். இறைத்தூதர் (ஸல்) கூறுகிறார்கள்:

لَتُؤَدُّنَّ الْحُقُوقَ إِلَى أَهْلِهَا يَوْمَ الْقِيَامَةِ حَتَّى يُقَادَ لِلشَّاةِ الْجَلْحَاءِ مِنَ الشَّاةِ الْقَرْنَاءِ

பொருள்: மறுமைநாளில் உரிமைகளை அதன் உரிமையாளர்களுக்குப் பெற்றுத்தரப்படும், எந்த அளவிற்கு என்றால் கொம்பில்லாத ஒரு ஆட்டிற்கும் அதனுடைய உரிமை (தீங்கிழைக்கப்பட்டதற்கான பரிகாரம்) கொம்புள்ள ஆட்டிடமிருந்து பெற்றுத்தரப்படும் (முஸ்லிம்) இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ ظَلَمَ قِيدَ شِبْرٍ مِنَ الأَرْضِ طُوِّقَهُ مِنْ سَبْعِ أَرَضِينَ

*பொருள்: எவரும் அநியாயமாக ஒரு ஜாண் அளவிற்கான நிலைத்தையும் ஒருவரிடமிருந்து அபகரித்துக்கொண்டால் மறுமையில் அவர்களுடைய கழுத்தில் ஏழு பூமிகளின்* **طوق** *(கழுத்துப்படையை வளையம்) அணிவிக்கப் படும்* **(متفق عليه)**. இன்று மனிதன் அநியாயமாக எதையும் பறித்துக் கொண்டாலும் நாளை மறுமைநாளில் அது அவனுக்குப் பெரும் கேடும் வேதனையுமாகவே ஆகிவிடும் மற்றும் நிச்சயம் அவன் தன்னுடைய அநீதி யான செயலுக்கான கடும் வேதனையை மறுமையில் அடைந்தே தீர வேண்டியதாக இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: *அல்லாஹ் தஆலா கொடுமையாளர்களின் கயிற்றைத் தளர்த்தி அவகாச மளிக்கின்றான், ஆனால், அவன் அதனைப்பிடித்துக் கொள்ளும்போது அப்பபடிப்பட்டவர்களுக்கு எந்தஅவகாசமும் இருக்காது* **(متفق عليه).** இறைத் தூதர் ﷺ அவர்கள் இதனைக்கூறிவிட்டு இந்த வசனத்தை ஓதிக்காண் பித்தார்கள்:

وَكَذَٰلِكَ أَخْذُ رَبِّكَ إِذَآ أَخَذَ ٱلْقُرَىٰ وَهِيَ ظَٰلِمَةٌ ۚ إِنَّ أَخْذَهُۥٓ أَلِيمٌ شَدِيدٌ ﴿١٠٢﴾ **(هود:102)**

பொருள்: *மேலும், அக்கிரமம் புரிந்துகொண்டிருக்கக்கூடிய ஊர்களை உம் இறைவன் தண்டிக்கும்போது அவனுடைய தண்டனை இப்படித்தான் இருக்கும். திண்ணமாக, அவனது தண்டனை வேதனை மிக்கதும் மிகக் கடுமையானதுமாகும். (ஹூத் 102)*

*ஹதீத்ஸ் ஃகுத்சி எனும் அருள்வாக்குகளில் கூறப்பட்டுள்ளது:*

يَا عِبَادِي إِنِّي حَرَّمْتُ الظُّلْمَ عَلَى نَفْسِي، وَجَعَلْتُهُ بَيْنَكُمْ مُحَرَّمًا، فَلَا تَظَالَمُوا

பொருள்: *என்னடியார்களே, நான் என்மீது அநீதியை ஹராமானதாக ஆக்கிக்கொண்டுள்ளேன் மற்றும் உங்களுக்கிடையிலும் அதனை ஹராமாக் கியுள்ளேன், ஆகவே, உங்களுக்கிடையே ஒருவரையொருவர் அநீதியிழைத் துக் கொள்ளாதீர்கள்* (முஸ்லிம்). ஆகவே, நாம் அனைத்து நிலைகளிலும் அநீதி மற்றும் அநீதியாளர்களுக்கு உதவியாய் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

* * *

www.uzairlahaei.com